**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வட மாகாணம்**

**மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016**

**சித்திரக்கலை**

**தரம் - 10** | **நேரம் :- 1.00 மணி**

**சுட்டெண் :............................................** | **புள்ளி :-**

பகுதி **I**

- ***எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.***
- ***கீழே தரப்பட்ட ஒளிப்படத்தை இனங்கண்டு 1 – 5 வரையான வினாக்களுக்கு விடை தருக.***



மேலே தரப்பட்ட ஒளிப்படத்தில் காணப்படுவது (1) ………………………………………… என்ற பெயருடைய ஓவியமாகும். இக்கலையாக்கம் (2) …………………………………... காலப் பகுதிக்குரிய (3) ………………………………………….. விகாரையில் காணப்படுகிறது. இந்த ஓவியம் (4) …………………………………………….. என்னும் இலங்கை ஓவியரின் படைப்பாகும். இந்த ஓவியத்தில் (5) ………………………………….. என்ற நவீன ஐரோப்பிய ஓவியரது கனவடிவவாத கலைப்பண்பு காணப்படுகிறது.

**6 – *10* வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடை எழுதுக.**

6. இஸ்லாமிய பள்ளிவாசல் கட்டிடத்தில் காணக்கூடிய கூர்முனை கொண்ட கோள வடிவ கட்டிட அமைப்பு யாது?

   ……………………………………………………………………………………………..

7. அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள புராதன குகை ஒன்றில் "உடும்பு" எனும் ரேகைச் சித்திரம் சிறப்பாக வரையப்பட்டுள்ளது. குகையின் பெயரைத் தருக?

   ……………………………………………………………………………………..



kalvi.lk

8. அநுராதபுர காலப்பகுதிக்குரிய குப்த மரபில் அமைக்கப்பட்ட கலைத்திறன்மிக்க காவற்சிலையின் பெயர் யாது?

……………………………………………………………………………………………..

9. இலங்கைக் கலைஞர்கள் மட்பாண்டக் கைத்தொழிலில் பயன்படுத்தும் பிரதான உபகரணம் யாது?

……………………………………………………………………………………………..

10. அநுராதபுர காலப்பகுதிக்குரியதும் நீர்க்குமிழி வடிவில் அமைக்கப்பட்டதும் சுற்றிவர யானை வடிவ மதில் அமைப்பைக் கொண்டதுமான தாதுகோபத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?

……………………………………………………………………………………………..

**11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.**

11. நீர் வர்ண ஓவியத்தில் காணப்படும் சிறப்பியல்பு

1) நிறங்களை நீருடன் கலந்து பூசுதல்
2) ஒளி ஊடுருவி தெரியும் தன்மையை காட்டுதல்
3) வெள்ளை வர்ணத்தை பயன்படுத்தி நிறத்தை கூட்டுதலும் குறைத்தலும்
4) நிறங்கள் முனைப்பாக தெரியும் வகையில் நீரில் கரைந்துள்ள விதத்தை காட்டும்

12. சிகிரிய சுவரோவியங்கள் தொடர்பாக பேராசிரியர் செனரத் பரணவிதான வின் கருத்தாகக் காணப்படுவது?

1) இங்கு காணப்படும் பெண் உருவங்கள் மேகலதா விஜுலதா (முகிலும் மின்னலும்) என்பதைக் குறிக்கிறது.
2) நீர் விளையாடும் பெண்களாவர்.
3) காசியப்பனின் அரண்மனை சார்ந்த பெண்களாவர்.
4) தேவலோகப் பெண்களாவார்.

13. அநுராதபுரம் ரண்மசுப் (தங்க மீன்) பூங்காவிலிருந்து எடுத்து வரப்பட்டதும் குப்த மரபில் செதுக்கப்பட்டதுமான தற்போது இசுருமுனியா விகாரையில் வைக்கப்பட்டுள்ள சிற்பம்

1) குதிரைத் தலையும் போர் வீரனும் 2) அரச குடும்பம்
3) காதலர் சிற்பம் 4) நீர் விளையாடும் யானைகள்


14. பொலநறுவை உத்தரராமய விகாரையில் நின்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையின் கைகள் காட்டும் முத்திரை

1) அபய முத்திரை 2) கடக முத்திரை
3) தியான முத்திரை 4) பரதுக்க துக்கித முத்திரை

15. மைக்கலாஞ்சலோவின் நிர்மாணங்களாவன.


1) இறுதித் தீர்ப்பு, மொனாலிசா, கன்னிமாதா
2) டேவிட் சிலை, இறுதித் தீர்ப்பு, ஆதாமை படைத்தல்
3) அதென்ஸ் பாடசாலை, இறுதி தீர்ப்பு, மொனாலிசா
4) பாறையில் தேவமாதா, மொனாலிசா, டேவிட்

**16 – 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள ஒளிப்படங்களுடன் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை எதிரிலுள்ள A, B, C, D, E ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து அதனை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16.  ………………………….. A 

17.  ………………………….. B 

18.  ………………………….. C 

19.  ………………………….. D 

20.  ………………………….. E 



kalvi.lk

**21 தொடக்கம் 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இடைவெளிக்கும் பொருத்தமான சொல்லை இட்டு நிரப்புக.**

21. பித்தளை வார்ப்பு வேலையின் போது சிற்பங்களைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூல உருவம் ……………..……………………………. ஊடகத்தினால் செய்யப்படுகிறது.

22. இலங்கையின் விசேடமான கட்டிட கலைப்பண்பைக் காட்டும் பொலநறுவை காலத்துக்குரிய நிஸங்கமல்ல அரசனால் நிர்மாணிக்கப்பட்ட நிஸங்கலதா மண்டபம் ……………………… பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டதாகும்.

23. கொழும்புக் காலத்துக்குரிய புதிய களனி விகாரை சுவரில் ஹேமமாலா தந்த குமாரன் எனும் ஓவியத்தை மிகச் சிறப்பாக …………………………….. ஓவியர் வரைந்துள்ளார்.

24. கம்பளைக் காலத்துக்குரிய …………………………… விகாரையின் கருங்கல் தூண்களின்அடிப்பாகத்தில் நடனகாரர், மேளகாரர் ஊர்வலக்காட்சிகள் லயத்துடன் உயிரோட்டமாக செதுக்கப்பட்டுள்ளன.

25. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கலை ஓவியரான மைக்கலாஞ்சலோவினால் வடிவமைக்கப்பட்ட இறந்த யேசுவை மடியில் தாங்கிய மாதா (பியாட்டா) சிற்பம் ……………………………... ஊடகத்தினால் ஆக்கப்பட்டது.

**26 – 30 வரையான வினாக்களுக்கு F G H I J எனும் ஒளிப்படங்களின் துணையுடன் விடை எழுதுக.**




**F**




**G**



**H**



**I**



**J**

26. F எழுத்தினால் காட்டப்படும் ஓவியம் மேலைத்தேய கீழைத்தேய ஓவிய பாணியை பின்பற்றி கொழும்புக் காலத்தில் வரைந்த ஓவியர் யார்?

………………………………………………………………………………………………..

27. G எழுத்தால் காட்டப்படும் கிரேக்கத்தின் தொன்மை யுகத்தைச் சேர்ந்த தங்கம் யானைத் தந்தத்தாலும் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலையினை நிர்மாணித்த கலைஞர்?

………………………………………………………………………………………………..

28. H எழுத்தினால் குறிப்பிடப்படும் ஓவியம் கண்டிக்கால பகுதிக்குரியது. இதன் பெயரை தருக?

………………………………………………………………………………………………..



kalvi.lk

29. I எழுத்தால் காட்டப்படும் பராக்கிரமபாகுவின் சிலை என கருதப்படும் சிலையின் கைகள் தாங்கியுள்ள பெறுமதிமிக்க பொருள் யாது?

…………………………………………………………………………………………………..

30. J எழுத்தால் காட்டப்படும் கலைப்படைப்பு இலங்கைக்கே உரித்தான எக்கலைக் கைத்தொழிலை பிரதிபலிக்கிறது?

…………………………………………………………………………………………………..

**31 – 35 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட சொற்களின் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான வாக்கியம் ஒவ்வொன்று எழுதுக.**

31. மடோல் குறுப்பாவ :

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

32. பர்ஜன்ய :

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

33. வர்ண பேதம் :

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

34. அல்பனா :

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

35. டம்பிட்ட :

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

***36 – 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தை இனங்கண்டு அதன் கலைப்பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் வகையில், தரப்பட்ட உபதலைப்புகளுக்கு அமைவாக பொருள் தரும் வகையில் 5 வாக்கியங்கள் எழுதுக.***



*36.* தொனிப்பொருள் :

……………………………………………………………………………………………………..

*37.* கலைஞர்

……………………………………………………………………………………………………..

*38.* காணப்படும் இடம்

……………………………………………………………………………………………………..

*39.* உணர்வு வெளிப்பாடு

……………………………………………………………………………………………………..

*40.* ஒழுங்கமைப்பு

……………………………………………………………………………………………………..

**(40 x 1 = 40 புள்ளிகள்)**



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வட மாகாணம்**

**மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016**

**சித்திரக்கலை**


தரம் - 10 நேரம் :- 2.00 மணி

சுட்டெண் :.............................................. புள்ளி :-

பகுதி II

- **பொருள் பார்த்து வரைதல்**
    - ❖ மண்பானை
    - ❖ பெட்டி (வெள்ளைத் தாளினால் சுற்றப்பட்டிருக்க வேண்டும்)
    - ❖ இளநீர்
    - ❖ சீத்தைத் துணி (1/2 மீற்றர் அளவுள்ளது)
    - ❖ அகன்ற இலையுள்ள குரோட்டன் கிளை

*(30 புள்ளிகள்)*





kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வட மாகாணம்**

மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016

சித்திரக்கலை

தரம் - 10 நேரம் :- 2.00 மணி

சுட்டெண் :........................................... புள்ளி :-

பகுதி III

**அ, ஆ. இ ஆகிய பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு தலைப்பினைத் தெரிவுசெய்து வரைந்து வர்ணம் தீட்டுக.**

**"அ" - படவாக்கம்**

1) பாடசாலை சிரமதானத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியரும் மாணவர்களும்
2) சமய வழிபாடொன்றில் ஈடுபட்டிருக்கும் பக்தர்கள்
3) வனத்தில் சுதந்திரமாக நடமாடித் திரியும் மிருகங்கள்
4) கிராமத்தில் உள்ள தேநீர் கடை

**"ஆ" அலங்கார ஆக்கம்**

5) வரவேற்பு அறை ஒன்றுக்குரிய நிலத்தில் விரிக்கும் கம்பளம் ஒன்றுக்கான அலங்காரம்
6) குழந்தைகளின் படுக்கை விரிப்பு ஒன்றுக்கான அலங்காரம்.
7) குடைத்துணி ஒன்றுக்கான நவீன வடிவமைப்பிலான அலங்காரம்.
8) விற்பனைக்கும் உற்பத்திக்கும் பொருத்தமான வகையில் சீத்தைத் துணி அலங்காரம்.

**"இ" கிரபிக் அலங்காரம்**

9) புதிதாக சந்தைக்கு அறிமுகமாகும் பழரசம் போத்தல் ஒன்றுக்கான விற்பனை சுட்டி (லேபல்)
10) போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான சுவரொட்டி
11) புதிதாக ஆரம்பிக்கப்படும் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கான இலச்சினை வடிவமைத்தல்.
12) சிறுவர் கதைப்புத்தகம் ஒன்றுக்கான அட்டைப்படம்.

**(30 புள்ளிகள்)**



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**